இலக்கியம் – வாழ்வின் புரிதலுக்கான கருவி

அரிவை

மாத இதழ்

கையெழுத்துப் பிரதி

இதழ் 5

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அரிவை

இலக்கிய மாத இதழ்.

கையெழுத்துப் பிரதி
அக்டோபர் '03

ஆசிரியர் குழு

DR. சதிய ராஜேஷ்வரன் M.D

DR. மதுக்குமார் M.D

பொறுப்பு ஆசிரியர்

S. பாஸ்கரன் III - BSMS

இதழ் வடிவம்

M. சரவணக்குமார்

உள்ளடக்கம்

* தலையங்கம்
* கவிதை
* கட்டுரை
* சிறுகதை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தலையங்கம்

கல்வி தந்தைகள் உருவாக்கிய கல்விச் சந்தைகள்

"தொட்டனைத்தூறும் மணற்கேணி" என்ற குறள் மாற்றியமைக்கப்பட வேண்டு கல்வி பயில்வோர்க்கு பயன்படும் கேணியாக இல்லாமல் கல்வி பயிற்சி கொடுக்கும் இடங்கள் மட்டுமே வளர்ந்து வருகின்றன. இது கல்வியின் வளர்ச்சி அல்ல வீக்கம் என்ற நிலையே தொடர்கிறது. வேலையில்லா பட்டதாரிகளை உருவாக்குவதற்கான தொழிற் சாலைகளாக கல்வி நிறுவனங்கள் மாறிவருகின்றன. STD பூத்களை மிஞ்சும் பொறியியல் மற்றும் அறிவியல் கல்லூரிகளின் நிலைப்பாடு எதிர்கால சந்ததியினரை கௌரவ பிச்சைக்காரர்களாக மாற்றிவிடும். வெறியே பயிரை மேய்வது போல அரசாங்கம் அறிவித்த கல்விகட்டணம் வரதட்சணையை விட கொடுமையானது. ஏழை மாணவனுக்கு எழுந்தறிவு என்பது எட்டாக்கனியாகும் காலம் மிக விரைவில் போதாத காலமாக மாங்கிகளும் வரிந்து கட்டி கல்விக்கூடன் அளிக்கிறது. வேலைகிடைத்தால் தானே வங்கிப்பணம் மீட்கப்படும். இந்த குற்றங்களுக்கு அடிப்படை விதையை போட்டவர் யார்? நிச்சயமாய் பெற்றோரே குற்றவாளிகள். கல்வியிலும் கௌரவம் பார்த்து முட்டாளை விலைக்கு விற்றுவிடுதல் இந்த சமுதாய சீர்கேடு தொடர்கிறது. கோடி கொடுத்தாலும் காளைகள் பால் கறக்காது, தகுதியற்ற மாணவர்கள் தங்களை தகுதியுள்ளவர்களாக மாற்ற பணம் மட்டுமே விலையானால், சரஸ்வதி சபதம் கீதையின் தீர்ப்பும் மாறும், அதால் சமுதாய சீரழிவின் ஏர் அங்கமாக கல்வியும் களம்மாறியதில் சலுகி நிற்கிறோம். வீணை ஒரு பக்கமும், வடு ஒரு பக்கம் விற்கப்பட்டு கிரீடம் கையில் ஏந்த காலமகள் விலை போகிறாள்! தவலை இல்லாமல் காரில் உலம் வரும் அரசாங்கமும், பல்லாலை கடிகாரங்களின் A/C அறையை அலங்கரிக்கும் VC-க்களும் கண்திறப்பார்களா?

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கட்டுரை

அடையாளம் இழக்கும் திராவிட தெய்வங்கள்

திராவிடங்களில் உழைக்கும் மக்கள் வணங்கும் தெய்வங்களை தமிழ்தெய்வங்கள், நாட்டார் தெய்வ வழிபாடு எனக் குறிப்பிட வேண்டுமே தவிர சூத்தெய்வம் என அழைக்கக் கூடாது.

இன்று "முதேவி" என அறியப்பட்டது அறியப்படும் தொல் திராவிடப் பெண் தெய்வத்தின் உண்மையான பெயர் "மூத்த தேவி" அத்தெய்வத்தின் மிகப் பழைய பெயர் "முகடி". வரலாற்றில் நிகழ்ந்த ஆரிய மத கலப்பால் இத்தெய்வம் "மூத்த தேவி" "மூதேவி" யாக்கப்பட்டது. மனைவி "சீதேவி"யின் அக்கவாக்கப்பட்டது. மூத்த தேவிக்கு இன்றும் கூட காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலிலும், திருப்பரங்குன்றத்திலும் தனிக் கோவில் உண்டு. (திருப்பரங்குன்றத்தில் பூட்டி வைக்கப்பட்டுள்ளது)

வெள்ளையன், வெள்ளையம்மாள், வெள்ளைச்சாமி ஆகிய திராவிட தெய்வங்கள் ஆரிய மத வருகையால் மறைந்து போயின.

கிருஷ்ணனின் அண்ணனாக அறியப்படும் பலராமன் தான் வெள்ளைச்சாமி. பூர்வீகத் திராவிடத் தெய்வமான வெள்ளைச்சாமிக்கு பலராமன், பலபத்ரன் என்று பெயர்கள் உண்டு. இத்தெய்வத்தின் கொடி "பனைக் கொடி" இத்தெய்வத்தின் ஆயுதம் கலப்பை.

ஆரிய மதம் திராவிட தெய்வங்களை ஆக்கிரமித்த முதலியே ஆணை மதத்தின் பெண் தெய்வத்தினை "சரசுவதி" என பெயர்மாற்றம் செய்து ஆரிய மத கடவுளாக்கியது.

தமிழர்களுக்கு "தாய்த்" தெய்வம், "மகன்" தெய்வம் என்ற இரு தெய்வங்கள்தான் உண்டு, தாய் தெய்வத்திற்கு காடு அமர் செல்வி என்பது உள்ளிட்டுப் பல பெயர்கள் உண்டு

மகன் தெய்வத்தின் பெயர் "சேயோன்" இத்தெய்வத்தின் பூசாரி "வேலன்" சாமியாடி "கிணைத்தி" செம்மறி ஆட்டு இரத்தத்தை தினை அரிசியுடன் கலந்து சேயோனுக்குப் படையல் போடப்படும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

9 ஆம் நூற்றாண்டுக்கு முன்பாக இத்தெய்வம் ஆரிய மதத்தில் சேர்க்கப்பட்டு சுப்பிரமணியன் என கூக்கப்பட்டது.

வடமாவட்டத்தில் வணங்கப்படும் யோனியம்மனும், தென் மாவட்டத்தில் வணங்கப்படும் இசக்கியம்மனும் "சிமண மதத்தில்" இருந்து தமிழர்கள் தத்து எடுத்துக் கொண்ட தெய்வங்கள்.

வடமாநிலத்தில் (வாதாபியில்) கேது செய்யும் (தீண்டி) தெய்வமாக கருதப்பட்ட "மல்லையார்" ஆரியர்களால் முதல் கடவுளாக தென் மாநிலங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டது.

தமிழர்களுக்கு என தனியாக தெய்வ வழிபாடும் சடங்குகளும் உண்டு. "கிடா வெட்டு தடைச்சட்டம்" போன்ற வற்றால். திராவிட தெய்வங்கள் ஆரிய முலாம் பூசப்பட்டு கால ஓட்டத்தில் மறைந்து போகும். திராவிட அடையாளங்கள் கூட்டமிட்டு தொடர்ந்து அழிக்கப்படுகின்றன.

— நிவன் BSMS

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கவிதை

இளைஞரின் கதை

இனியாவது நான் விலை போவேனா?
அழகான என்னை கவர்ச்சி இல்லை என்றீர்
என்னிடம் கவர்ச்சி இல்லை உயிரை கொல்லும்
- உயிர் கொல்லியும் இல்லை.

இனியாவது நான் விலை போவேனா?
முன்பெல்லாம் பெற்றோரால் எனக்கு பெருமை
தங்கள் தருதலை மகனை விட நான் மேல் என்றனர்
இன்றோ உன்னையும் தென்னையும் வைத்ததற்கு
இரண்டாம் ஆட்டம் போயிருப்பேன் என்கிறார்
இனியாவது நான் விலை போவேனா?

உலக அழகிகள் உயிர்கொல்லி பானத்தை
- உயர்த்தி பிடிக்க

விஜய்யும் சச்சினும் ஒபீட்டில் மட்டுமே இளைஞர்
- குடிக்கின்றனர்

இனியாவது நான் விலை போவேனா?
எனக்கும் அடித்தது யோகம்! இனி
இந்தியாவில் மட்டுமே உயிர்கொல்லி பானம் விற்கப்படும்
என்னை போன்ற இந்தியாவில் பிறந்த இளைஞர்கள்
England, Italy காரனின் சிறுநீரில் எச்சமாக

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஏற்றுமதி ஆகிறோம்! என்னை

ஏன்ற என் parent's ஐ விட்டு

patent செய்யப்படுகிறேன் பரதேசியாய் பிறதேசத்தில்

இனியாவது இந்தியர்கள் என்னை விரும்புவார்களா?

— Dr. சத்தியராஜேஷ்வரன். M.D (S)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சிறுகதை.

காகங்கள்

– சுந்தர ராமசாமி.

அப்படியென்றால் நொண்டிக் காகம் செத்துத் தொலைந்து போக வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்களா? என்று நான் பரிதாபக் குத்தினேன்.

மார்பு படபடக்க தலைச்சுற்றில் உடல் தள்ளாடிற்று. ஆதலிட் தியாகி கும்பலிங்கம் பிள்ளை என்னை அணைத்துக் கொண்டார். அன்றைய காலை கூட்டத்தில் என்னை கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்திருந்தாள் என் மனைவி. எம்.ஆர். உமையொருபாகன் கலைக்டர் அருகே நகர்ந்து நன் சுதந்திர விடியலை சபையைச் சுடுற்றிப் பார்த்தபடி அவர் காதில் ஏதோ முணுமுணுத்தார். அதை துளிலி-யமாக அனுமானித்து என் மனம். சமீபமாக எனக்கு மனநிலை சரியில்லை என்றும், என் கத்தலைப் பொருட்படுத்த வேண்டாம் என்றும் அவர் சொல்-லியிருக்கக்கூடும். என் உற்ற நண்பரான ஆதலிட் தியாகியிடமிருந்து இந்தத் தகவலை அவருக்குத் தொர்யாமலேயே இவர் கொண்டு எடுத்திருக்கக் கூடும்.

மனநோய் மருத்துவரின் முடிவில் நான் சங்கடப்பட்டு. வந்த நாட்கள் அனை. ஒவ்வொரு காரியம் ஆற்றும்போதும் தெள்வான சிந்தனை-யின் பலத்தை நான் உணர்ந்து வந்ததில் மருத்து-வரின் முடிவை என் மனம் மறுத்துக்கொண்டி-ருந்தது. மன ஆரோக்கியம் பற்றிய என் உள்ளுணர்வை நான் மருத்துவரிடம் சொல்லி விரிவிலை - அதுவும் மனநோயின் ஒரு தன்மை என்று அவர் சொல்லிவிடக்கூடும் என்றால் அதன்பின் எனக்கும் புமிக்கமான கடைசி இழையும் அறுந்து போய்விடக்கூடும். படிமங்களை உடைத்து மனித நடமன-ங்களைக் கண்டடைக்க வேண்டும் என்பதில் நான் கொண்டிருந்த ஈடுபாடுக்கற்ற வெற்-றுப் பார்வையில் நோயாளியாக என்னை காட்சி கொள்ள வைக்கிறது என்று நம்பத் தொடங்கியிருந்தேன்.

அடிகிய கருநிற இளைஞரான கலைக்டர் பேசத் தொடங்கினார். சபையின் உணர்ச்சி கொந்த நிலையில் இருந்த நேரம் அது 'ஒரு வழிப் பாதையை முடியடிப்போம்' என்று உணர்ச்சி-வசப்பட்டு வெகுந்தவர் குரலெடுத்துக் குத்தி ஒரு சில கணங்கள்தான் ஆகியிருந்தன. சாந்தமும் தந்திரமும் மென்மைத் தோற்றமும் கனிவுக் கதுப்பு-கொண்டவர் அவர். ஊரின் அதுப்பெரிய சரீரி என்பதால் குடிமக்கள் மத்தியில் விநோதப் புகழ் பெற்றிருந்தார். குடிவான தென்றல் வாரித்தைகளை தர்க்கத்தின் அறுபடா கிடியில் கோத்துச் கொண்டு போனார் கலைக்டர். புள்ளி விபரங்கள் வரத் தொடங்கியிருந்தன. இன் விருக்கிறார்கள் பின்தொடரும். ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்படாத வழுவை ஆசீர்வாதமாகக் கொண்டவை அவை. வணிகர்களின் சீரமங்களை வணிகர்-களை விடவும் திறம்பட வர்ணிப்பதுந்தி கொண்டு போனார் கலைக்டர். எதிராளியின் அம்புறாத்தூணியைக் காலியாக்கும் உபாயம் தானே அது! அதன் பின் பொதுமக்களின் சீரமங்கள் - அவர்கள் தானே வாக்காளப் பெருமக்கள்-என்றும் என்ன செய்ய! காலம் மாற் வருகிறது. தொடிய முடிச்சுக்களை அவிழ்க்க சில சமயம் அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டு விடுகிறது. நவீனச் சிலடுக்குகளில் ஆதப்பெரிய சிடுக்கு போக்கிவரத்து. பாதைகளின் அகலங்கள் விரிவதில்லை. ஆசனங்களின் எண்ணிக்கையோ கூண்டு தோறும் வரக்கூடிக் கொண்டிருக்கிறது. உருளைச் சக்கரங்கள் மீது மத்திய தர வர்க்கத்தின் சாமம் அளவிட முடியாதது. நேற்றோ பணம் வேண்டும் பொருள் வாங்க. கடம் பெறும் திட்டம் இருந்தால்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

போதும் இனி. நாளத்தின் ஓவியம் தன் கரங்களை கூட்டுப்படுத்துவதாகச் சொன்னார் கலைக்டர். ஒரு மணிக் கட்டின்மீது மற்றொரு மேல்கட்டை குறுக்காக வைத்துக் காட்டினார். கணிகளுக்குப் புலப்படாத தேர்வடம் ஒரு கணம் அவர் கரங்களைச் சுற்றிவிட்டு மறைந்தது.

கூட்டம் அமைப்படு நெகிழத் தொடங்கியிருந்தது. கலைக்டரின் தீறமையை ரசிக்கும் முகபாவங்கள் மிளிரத் தொடங்கின. ஆகஸ்ட் தியாகி முற்றாகக் கரைந்திருந்தார். சில நிமிடங்களுக்கு முன் பெருங்கலைவுடன் எழுந்து சுத்தியவர் தான் அவரும். என் அருகில் திரும்பி என்னை கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு வரும் போது, 'போற உசிருதாலா, மயிரு, இதில போட்டுமெங்கேன்' என்று சொன்னவர் அவர்.

எம். ஆர். உமையொருபாகன் கலைக்டரின் சொல்ஜாலத்தை சுவையின் முகங்களின் கண்டு பளகாங்கிதத்தில் வழிந்துகொண்டிருந்தார் அவர் ஒரு பறவி ஜால்ரா.

தனிமைப்படுத்தப்பட்டுவிட்டோம் என்ற உள்ளுணர்வு தோன்றியதும் என் ரத்த அழுத்தம் ஏற்றம்.

'காகங்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? என்று நான் மிகப் பெரியதாகக் கத்தினேன்.

கலைக்டரின் அதனத்தில் ஒரு புன் முறுவல். புத்தனையும் வெட்கப்படச் செய்யும் சாந்தம். என் முகத்தைப் பார்த்தபடி அவர் சொன்னார்.

உங்கள் உணர்ச்சியை நான் வெகுவாக மதிக்கிறேன். நீங்கள் எழுதி வரும் கவிதைகள் என் மனதைக் கவர்கின்றன "காகங்கள்" என்ற கவிதை வரிசையில் ஆறாவதை நேற்றுப் படித்தேன்.

கவிதையை அவர் சொல்லத் தொடங்கினார். என்ன நினைவாற்றல்! என்ன சொற்சுத்தம்! எவ்வளவு இசைவான ஏற்ற இறக்கங்கள்! ஆச்சரியம் தான். இடைவெளிகளின் மௌனங்களில் அர்த்தங்கள் பூத்துக் குலுங்குகின்றன. எனக்கே வியப்பாக இருந்தது. கூட்டம் மேலும் கரைந்தது.

'கவிதைகளால் காகங்கள் வாழ்வித்தலை' என்று நான் மேலும் உரக்கக் கத்தினேன்.

'அவர் சொல்வதைத்தான் கேட்டுத் தொலையுங்களேன் ஐயா' என்ற குரல் கேட்டு பின்னாலிருந்து. அந்தக் குரலின் முகம் எனக்குத் தெரியும். எங்கள் ஊரில் அரை நூற்றாண்டாக என்னை எதிர்த்தவரும் குரல் அது. நான் இரண்டு இரண்டும் நாலு என்று சொன்ன நேரங்களில் எல்லாம் அது ஐந்து என்று சொல்லியிருக்கிறது. நான் ஐந்து என்று சொல்லும்போது மூன்று என்று சொல்லியிருக்கிறது. தாக்கத்திற்கு அடங்கா ஜென்மப் பகை அது.

பின்னால் திரும்பி, 'உங்கள் உபதேசம் எனக்குத் தேவையில்லை' என்று கத்தினேன்.

கலைக்டரைப் பார்த்து, 'நீங்கள் தந்திர மாகப் பேசுகிறீர்கள்; நான் கூட்டத்தை விட்டு வெளியேறுகிறேன்' என்று சொல்லிவிட்டு கைத்தடியை எடுத்துக்கொண்டேன். ஆகஸ்ட் தியாகி என் தோள் சுளையைப் பற்றியவாறு பின்னால் வந்தார்.

'மனிதனுக்கு நாதியில்லை; நொண்டிக் காகமும் புத்திகெட்ட முண்டம்'. இது ஜென்மவைரோதியின் குரல்.

நான் பின்னால் திரும்பி என் அடிவயிற்றி லிருந்து என் உயிரை எடுத்து, 'முன்தன் ஒவ்வொரு காகம் ஒவ்வொரு சிலை' என்று கத்தினேன். எனக்கு மூச்சு வரைக்கவில்லை. 'நொண்டிக் காகங்களைப் பற்றிய உணர்வுகள் இல்லாததால் நொண்டி நாகரீகத்தை உருவாக்கி வைத்துக் கொண்டு

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நக்கிறீர்கள்' என்று கத்தினான்.

நெஞ்சமெல்லாம் நம்பிக்கை அடியில் வெறுமையைக் கொண்டிருக்காமலே நீங்கள் வாழ்வீர்கள். கூட்டம் கலைந்து சிரித்தது.

'அவர் கவிஞர்' என்றார் கலைக்டர்.

நான் கலைக்டரைப் பார்த்து, நான் கவிஞன் அல்ல; வெறும் மனிதன்' என்றேன்.

2

அப்போது இளமை கூட முடிந்திருந்த காலம். அந்த நாட்களில் சிவேரியார் அலை தூங்கிப்பலிருந்து வடத் தொடங்கி பார்வதிபுரம் அனந்தன் காலவாயை போய் அடையும்போது அந்தாலை ஐந்து நாற்பதுதான் ஆகியிருக்கும். நாற்பது நிமிடங்களில் நான்கு மைல்களை சுலபமாகத் தாண்டி விடுவேன். மனம் காலத்தைப் பற்றி சதா கிழம்பி முறுவதும். அதே காலத்தை உடல் சுல்லியமாக வரையறுத்துக் கொண்டிருப்பதும் நாள்தோறும் என்னை வியப்பில் ஆழ்த்தும். அந்த நாட்களில் அனந்தன் காலவாய்க்கு அரைச்சுவர் இருந்தது. அன்றாடம் உட்கார்ந்து அதன் சொரசொரப்பை எண்ணற்ற நாட்கள் கடலைப்பருந்ததில் அதன்மீது முகுந்த மர்யம் ஏற்பட்டிருந்தது. காலத்தின் களிம்பு ஏறியிருந்த சுவர். அதில் உட்கார்ந்து இளைப்பாறும்போது முன்பக்கம் தொடுவானம் வரையிலும் வயற்காடுகள் தெரியும். அன்றைய காற்றின் ஸ்பரிசம் வேறாக இருந்ததை இப்போதும்கூட என் முயர்காலங்கள் நினைவுவைத்துக் கொண்டிருக்கின்றன. வேர்வையில் உடலோடு ஒட்டிக் கிடக்கும் நூல் முடி அது படும்போது ஏற்ற நாளங்களில் பனிக்கட்டிகள் கரையும். சிவேரியார் கோவிலிலிருந்து வடத் தொடங்கும்போதே பாரமேற்ற அரிசி மூட்டைகளை சுமந்து கொண்டு வரும் காளை வண்டிகளை எண்ணிக் கொண்டே வருவேன். அன்று மனதில் பதிந்த காளைகளின் முகங்கள் இப்போதும் நினைவில் இருக்கின்றன. வண்டிக்காரர்களின் முண்டாசு கட்டுகளும், இருளும், இருளில் கரையும் வண்டியோர்களின் முகங்களும், காளைகளின் முகங்களும். அரூப ஓவியங்களாக இப்போதும் மனதில் நிலைத்திருக்கின்றன. வண்டியோரங்களை வைத்து வண்டிக்காரர்களின் முகங்களை முன்கூட்டி அனுமானித்து சரியாகத்து முதிர்களை சரியாகப் போடக் கொண்டு போவேன். அந்த நாட்களில் வண்டிக்காரர்கள் இருளைக் கிழித்துக் கொண்டு பாடுவார்கள். அவர்களுடைய குரல்வளம் குடியிருப்புகளின் தூரைகளில் மோதச் சிதறும்.

காலங்கள் மாறின. மாறிய காலத்தின் கோலங்கள் அந்த நீண்ட பாதையிலும் இறங்கின. வண்டிகள் மறைந்து லாரிகள் ஓடத் தொடங்கின. மங்கல் விளக்கின் கை அகலத்தில் தங்கள் பாதங்களை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த கிராம விளக்குகள் மறைந்து, நிலவை அள்ளி தரையில் தெளிக்கும் மேர்க்குரி விளக்குகள் காலத்தின் நவீனத்தை நினைவு படுத்தத் தொடங்கின. இந்த மாற்றங்களினால் காகங்களின் நாலை உணவு சீர்தும் பாதிக்கப்படாதது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வண்டிகளிலிருந்து சிந்தும் அரிசிகளின் அளவும் கூடிக்கொண்டே போயிற்று. கடைமுனி உருத்தியாகிக் கொண்டிருந்த காகங்களின் கூட்டம் தீர்ந்து இதனால் உணவு தட்டுப்பாடு என்பது இல்லாமல் இருந்தது. அதிலும் காலத்தால் உருத்தியாகியிருந்த உணவு அது. கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் பெயரும் குடியானவர்கள் போலவோ உண்மையின் உருத்தியை நம்பி எங்கெங்கோ இருந்து வந்து குவிந்திருந்தன காகங்கள். புன்னைக் காடுகளின் அடர்த்திக்குப் புகழ்பெற்ற பிராந்தியம் என்பதால் குடியிருப்புப் பிரச்சினை கிளைக்காது போயிற்று அவற்றுக்கு.

காலப்போக்கில் ஓட முடியாமல் அடியற்று எனக்கு. ஆனால் அப்போதும் முடிந்த மட்டும் விரைவாக நடந்து போவேன். புழுதிப் பாதை தார்ச்சாலையாகி அதன்மேல் ஜல்லிகள் இடைக்கப்பட்டவே தூசியின்றி நடக்க இதமாக இருந்தது. இந்த நாட்களில்தான் புன்னைக் காடுகள் அழியத் தொடங்கின. காலிகிரிட் தூண்களில் உச்சியில் கம்பிகள் தெரியத் தொடங்கின. நவீன முருக்கு வமைனைகள்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அரிசையாக முளைத்தன. அதிகாலையில் நான் நடந்து போகும்போது ஏராளமான தீக்குச்சிக் கூடங்களிலிருந்து தொலைபேசியின் மணியோசை கேட்டவண்ணம் இருக்கும். அந்த நாட்களில், வண்டிகளை எண்ணிக்கொண்டிருந்தது போலவே லாரிகளையும் எண்ணிக் கொண்டிருந்தேன். வண்டிகளை நான் அதிகம் நேசித்தேன் என்றோ லாரிகளைக் குறைவாக நேசித்தேன் என்றோ சொல்ல முடியாது. பொதுவாக லாரிகளின் பெயர்கள் எனக்கு பிடித்திருந்தன. நவீன மோஸ்தர் சற்றுக் குறைவாகவிருந்தாலும் மண்ணின் மணம் கிளந்தது அவற்றுக்கு. அது மிகவும் மேட்டுப் பாங்கான பாதை. காலத்தின் நீட்சியில் அதன் மேட்டு தன்மை லாரிகள் வெடித்துக் கதறுகின்றனவோ என்ற பயங்கரம் எனக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. காலம் போகப் போக நீண்டு லாரிகளின் முச்சு திணறல்களுடன் குறைந்து கொண்டே வந்தன. அந்த நாட்களில் அரிசி லாரிகளை இரவையிலேயே தொற்றும் அலங்காரமானவை போகப்போக எனக்குப் பார்க்கவே கிடைக்கவில்லை. மேட்டுவி நகரும் லாரியின் சுருதியை கவனித்து கியர் மாற்றும் நுட்பத்தை அனுமானிப்பதில் சுவாரியம் கூடிக் கொண்டே போயிற்று. இவையனைத்தும் அதிக பட்ச உச்சியில் நான் என் மனதிற்குள் 'மாற்று' என்று சொல்லிக் கொள்ளும் நுட்பத்தில் கியர்கள் மாறி வரும் அப்போது நான் எனக்குள் சபாஷ் போட்டுக் கொள்வேன்.

அனந்தன் காலையாய் தாண்டி இப்போது மெம்பாரம் இருக்கிறபடியால் அப்போது நிலம். காந்தி மகுப்பான அவர் இருந்தால் முடிந்த முடிந்தாலும் பெண்களின் வெற்று முதுகுகளையோ கீழ் பரந்து துடிதாவும் தலைமயிர்களையோ நான் பார்த்ததில்லை. அவர்களுடைய முக்கியமிருந்து எழும் கிழவாணைகளும் பெண் பாலைக் கேர்ந்தவை என்று எனக்குத் தோன்றும் அந்த ஆசைகளும் அரிசி முனிகளைப் பொறுக்கி அதிகாலையில் கூட்டமாக வந்து இறங்கும் காகங்களின் அழுகைகளும் ஆனால் அழுதின் காரணப் படிமமும் ஆசைப் படிமமுமாகப் பட்டு மகான் மருந்தன.

பஸ்கள் ஓடத் தொடங்கியிருந்த காலத்தில் மருந்துவர்களின் உபயோகங்களாக அந்த பாதையில் பஸ் நிறுத்தச் சாவடிகள் தோன்றியிருந்தன. மருந்து வணைகளின் புகழுக்குக் குறையாத கலைப் பாங்கான சாவடிகள். அவற்றின் நூதன வடிவங்களில் உட்கார ஆசையப்பட்டு அனந்தன் காலையாய் சாவடிலிருந்து சாவடிக்கு என் காலை இலைப்பாதையை மாற்றிக் கொண்டேன். அருளானந்தம் பிரான்சிசின் எண்ணையிக் கடையை ஒட்டியிருந்த முதல் பஸ் நிறுத்தச் சாவடி என்னுடையது என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டிருந்தது. ஒரு நாள் தவறாமல் வெகுகாலம் உட்கார்ந்திருந்த உண்மை அது. அதி காலையில் அங்கே வந்து சேரும்போது இரண்டு ஆகாயப்பூக்களும், நெருப்பு வெட்டியும் என் ஜேபியில் இருப்பது எனக்கு சங்கோஜத்தைத் தரும். (இயேசுவை சீஸரைத் தொடக்கூடாது என்றவர்கள் முருகர்தவர்) என்னை ஆலையாக பற்ற வைத்துக் கொள்வேன். அந்த நம்பிக்கையும் வரையறையும் எந்தக் காகமும் அந்த மாரங்கியதில் வெளிப்பட்டிருக்க முடியாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். நுரைத்துவரும் இருளின் முகமாற்றங்களை நான் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கும் ~~சமய~~ நினைவிருக்கிற போதே ஆயிரக்கணக்கான காகங்களும் அவற்றின் கூடுகளிலிருந்து கவனித்து கொண்டிருக்கும் என்று நினைக்கும்போது ஏங்கூசமாக இருக்கும். கிளைகளுக்குள் மேய்ந்திய முதல் ஒளி வெளிச்சம் கணத்தில் அவற்றின் சிறகுகள் மறியும். வெகுதூரத்தில் அவை இரையைவாயும் கூட வெகுவரையில் வந்து ஏற கவனிப்பவை அவை. ஏமாந்திய பொழுது, இரை நுரைக்கவில்லை என்றால் அரிசி மணிகளைப் பொறுக்க முடியாமல் அவற்றை அழுத்துவிடும். இதுக் கூடிவரும் முதல் கணத்தீற்காக அவை காத்துக்கொண்டிருப்பது இயற்கையானதுதான். கோட்டயத்திலிருந்து பாரிஜாதபுரம் வரை ஆயிரக்கணக்கில் அவை வந்திறங்கும். அப்போது கத்தும் மாரகைகூட அவற்றுக்கு இருப்பதில்லை. குற்றவாளியின் கவனம் உடம்பில்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

யெங்கிலும் அவற்றின் உடலின் கூட அப்பொழுது
வெளுக்கத் தொடங்கும். முதலில் தெரியும் காகம்
என் மனதில் முகந்த துள்ளலை ஏற்படுத்தும்
முதலின் குளிர் தென்றல், சிந்து சிகரட் நிகும்,
காகங்களின் முதல் தோற்றம் இவை தரும்
பயத்தில் எனக்கு ஆயிப்பாவை கலைந்து வர்கள்
இதான்றுபடுத்தினிறன. என் கலைமகளின் நாடு
திற்கு நான் அந்த நிமிடங்களுக்கு நன்றி
சொல்ல வேண்டும்.

ஐம்பது ஆண்டுகளின் என்பது சற்று
நீண்ட காலப்பகுதிதான். ஆனால் இவ்வளவு
நாட்கள் பரவசப் பரபரப்புடன் கவனித்த
மன்பும் காகங்கள் வெளிப்படும் சொணம்
நம்பகமாகவோ, நிகை சம்பந்தமாகவோ
காகங்கள் எனக்கு எந்த உண்மையையும்
விளக்கவில்லை என்பதையும் நான் சொல்லி
வேண்டும். மாற மாற வெளிப்படும் சுதந்திரத்தை
அவை தக்கவைத்துக் கொண்டதில் ஒவ்வொரு
நாளும் வெற்றின் முதல் வெளிப்பாட்டைக்
காண நான் பரவசப் பரபரப்புடன்தான்
இருக்க வேண்டியிருந்தது. காகங்களின் சுதந்திர
வெளிப்பாடுதற்கு உதவும் வகையில் யானையும்
இந்த காலங்களில் தன் விஸ்தீரணத்தை விரிவு
படுத்திக் கொண்டே போவதுபோல் எனக்குத்
தோன்றி, முதுகணம் பத்து நாறு என்பதெல்லாம்
ஒரு சில கணங்களில் கடமரக்கணக்கான
மரங்கள் வெளியில் விரிந்து மௌனத்தில்
மூழ்கி மெதுவாகவும் மென்மையாகவும் தலை
ஆட்டி இருக்கும். அவை இரவுகளைத் தொடர்ந்து
பகலும் நான் திகட்டாமல் ஒரேயடியாக
ரசிக்கத் தொடங்குவேன்.

இரண்டு பக்கங்களிலும் சுறுசுறுப்பாக
தானில் உணவை முகர்ந்து கொண்டிருக்கும்
காகங்களைக் கவனித்தபடி நடப்பேன்.
பூவிரைவாயின் வொழுபாகுகளையும் கவனித்து
அவற்றை தன்னிச்சையாக இனம்கண்டு நான்
ஒருமுறை பெயர்களை அவற்றிற்கு வைத்து
உறவாட நான் ஒருக்கொண்ட
பிரயாணை நினைவாகமல். மப்பது
நாட்பட்டதுந்து ஒடைகள் தொடர்ந்து
பயனிற பின்பும் காகங்கள் தங்கள் சாயல்களின்
வேற்றுமைகளை மனிதனுக்கு ஒருபோதும் உணர்
தாது என்ற முடிவுக்கு வந்தேன். அதன் பின்
காகம் என்று சொல்லுது தவறு என்றும் பட்டது
காகங்கள் என்று சொல்வதுதான் சரி என்றும் பட்
டதனால் நடப்பமான அவதானிப்பில் அவற்றின்
அங்கங்களின் அழகு ஏற்கொண்டே போயிற்று.
அவற்றின் அசைவுகளிலும் அற்புதம் தவழ்ந்தது.
என் மூளையின் மரபணு அவை காலங்காலமாக
தாங்கப்பட்டிருக்கலாம். அந்த மரபு எனக்கு உதிர்ந்து
உதிர்ந்த வருவில் இருந்து எண்ணற்ற புதுக்கள்
பூத்தன. காகங்களை ஒருக்கத் தொடங்கும்போது
நமக்கும் உலகத்துமான உறவில் இங்கிதம்
தரும் என்று தோன்றிற்று. மனிதர்கள் தங்கள்
மீது ஏற்படுத்த அழுக்கைப் பற்றி அறிந்த
திருந்தும் என் மீது அவை நம்பிக்கை கொண்டன.
இது மிகப் பெரிய அங்கீகாரம் எனக்கு. அரிய மண்
கலை பரபரப்புடன் அவை வெளுத்தும்வரை என்
பாதங்களின் சிலவாங்களுக்காக அவை ஒருபோது
பறந்து போவதில்லை. தொடு அடியாக அவை
நகர்ந்து செல்லுமாம்.

முதிய காகங்களுக்கு என்னை மிக நன்றாக
தெரியும். அவை சொல்லி இளைய காகங்களும்
என்னை அறிந்திருந்தன. உறவின் நீட்சியில் என்னை
அவை மற்றொரு காகமாக கருதும் நாட்கள்
தூரத்தில் இல்லை என்று என்னைத் தொடங்கினேன்.
முதிய காகங்களிடம், 'நான் ஒரு கவிஞனும்கூட'
என்று சொல்லி ஏராளமான சிறு புன் முறுவலுடன்
அவை என் முகத்தைப் பார்த்தன. எங்களுக்கு
அது அவ்வளவு முக்கிய மல்ல' என்று சொல்வது
போல் தோன்றிற்று. அவர்கள் உலகத்தில் இருக்கும்
கவிதையைப் பற்றி நான் அக்கறை கொள்ளாத
வரையிலும் என் உலகத்துக் கவிதையைப் பற்றி
அவை அக்கறை கொள்ளாமல் இருப்பது நியாயம்
தான் என்று தோன்றிற்று. நீண்டகால முயற்சி
இருந்தும்கூட ஒரு வியாபாரத்தில் நான் அடைந்த
தோல்வி என் முன்னை அரித்துக் கொண்டே
இருந்தது. அருகிலிருக்கிறவர்களை வைத்து அதன்
அடையாளம் காண நான் முயன்றது அங்கு

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அடையாளம் காணும் அவலத்தில் முடிந்தது. இது எனக்குப் பெரிய தோல்விதான். நான் முற்றாக காகமாக முடியாது என்பதற்கு அடையாளமாக இருந்தது இது.

பறந்து மேடையை நான் தாண்டிச் செல்லும் போது காகங்கள் காலை உணவை முடித்திருக்கும் போது உயர்ந்து எழும் பறந்தும், பறந்து தரையில் மோதும் ஒசையும் மட்டுமே பொற்களைக் கிப் புலனாகும். அங்கு சில கணங்கள் நின்று காட்சிக்கும் ஒசைக்கும் இன்ன இடைவெளியை நிலையப்படுத்த முனைவேன். அப்போது என்னைச் சுற்றி காகங்கள் இரா. அவை முற்றாக பறந்து மறைந்திருக்கும். அந்த நேரத்தில் கட அபூர்வமாக காகங்களில் நோயாளிகளையும், வங்க உறவினர்களையும் பாதையில் பார்த்திருக்கிறேன். பாதையில் வரு மனை அங்கு கடத் தெரியாது. அப்போதும் அவற்றுக்கு சொந்த இருக்கும்.

காகங்களுக்கும் எனக்குமான உறவு ஐம்பது வருடங்களைத் தாண்டியிருந்த நேரத்தில் இந்தப் புதிய கலைக்டர் எங்கள் ஊருக்கு வந்து ஆர்ந்தார். அவர் மூளைக்குள் என்ன திரும்பிற்று என்று எனக்குத் தெரியாது. உலகம் மேம்பட்ட மனிதர்களுக்கு மட்டுமே சொந்தம் என்ற எண்ணம் அவருக்கு இருந்திருக்கலாம். உலகத்தை மேம்படுத்த மனிதனால் மட்டுமே கூடும் என்ற கருத்தையும் அவருக்கு இருந்திருக்கலாம். அவர் ஒரு உத்தரவில் கையெழுத்திட்டார். மறுநாள் மிக மோசமான அதிர்ச்சி எனக்குக் காத்திருந்தது.

3

அன்று கனவு சார்ந்த கற்பனைகளில் ஒரு சில நிமிஷங்களை இழந்து விட்டிருந்த நான் பிரக்ஞை திரும்பியதும் தீவிரமான மனதுடன் வானவெளியைப் பார்த்தேன். வெகு தொலைவில் இருந்து காகங்கள் வந்து கொண்டிருந்தன. அவற்றின் முதல் வெளிப்பாட்டை சற்றே மிரண்டு கவனிக்க நேர்ந்தது எனக்கு ஏமாற்றத்தைத் தந்தது. அதற்குள் நடுவானத்திற்கு வந்து விட்டிருந்தன அவை. வழக்கத்தைவிடவும் கிடுகிடுவென்று வந்தன. அவை பறந்து வரும்போது பெருமிடக்கூடும் என்றால் என் பார்வையங்களை வைத்து அவை விழும் இடங்களை அனுமானித்து மனக்காட்சிகளாக அந்தப் பிராந்தியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்று என் மனம் குவிய மறுத்தது. காகங்கள் மீது சிறிது வருத்தத்துடன் நான் இருந்தேன் என்பது உண்மைதான். நெருக்கமானவர்கள் மீது உருவாகும் மிகைப்படும் பராதி ஒன்று என் மனதில் உருவாகிக் கொண்டிருந்தது.

காகங்கள் மீது நான் வைத்திருக்கும் அபிமானத்துக்கு அனுசரணையாக அவை என்னிடம் நடந்து கொள்ளவில்லையோ என்று தோன்ற ஆரம்பித்தது - என் கவிடங்கள் அவற்றிற்கு பொருட்டு இல்லையா? வயோதிகமும் விசித்திர ஆயுட்டு என் மீது நம்பிக்கை கொள்ள முடியாத நிலை என் மனைவிக்கே உருவாகியிருக்கிறது. இவை பற்றி ஏதும் விசாரம் இல்லாமல் என் முடங்களாக இருக்கின்றன இந்தக் காகங்கள்? அவற்றில் முதுமை எய்திய காகங்களையும் என்னிடம் இப்படித்தான் வாடிக்கை' என்று தொனி முன்வந்திருக்க வேண்டாமா? அவற்றிடமிருந்து ஆறுதல் எதிர்பார்க்க எனக்கு உரிமை இல்லை அவற்றின் மீது உள்ளது நான் கொண்டிருந்த வருத்தத்திலிருந்தான் அவற்றின் முதல் வெளிப்பாடு அன்று கவனிக்கத் தவறினேன் என்று தோன்றிற்று.

ஏதோ ஒரு விந்தியாசமான நன்மை மனதை அழுத்திற்று. இனம் தெரியாத ஒரு பதற்றம் என்னைச் சுற்றி புகைந்து கொண்டு வருவதுபோல் தோன்றிற்று. அன்று அதிகாலை சிறிது தூறல் இருந்ததால் குளித்த பின் துவட்டிக் கொள்ளாததுபோல் இருந்தது பூமி. சோம்பல் சூரியனும் அன்று மேகங்களில் புரண்டு கொண்டிருந்தான். தொலைதூரங்களிலிருந்து காகங்களின் கூட்ட கத்தல்கள் அப்போது கேட்கத் தொடங்கின. இந்த விதமான கத்தலை நான் வெகுபோதும் கேட்டதில்லை தொலைதூரத்தில் இருந்து எழுந்த கத்தலை கேட்ட காகங்கள் வரிசையாகக் கத்தத் தொடங்க சூறை சுருட்டிக்கொண்டு வரும் புழுதிபோல் கத்தல்கள் என்னை நோக்கி வந்து தாக்கத் தொடங்கின. அவற்றின் கத்தல் என் உடம்பைக் குதறுவது போல் எனக்குத் தோன்றிற்று. அவற்றின் கத்தல்களில் காகங்களின் கத்தல்கள் மறைந்து விடியற்காலைகளில் பசியால்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தூபக்கும் கைக்குழந்தைகளின் கதறல்கள் உருவாகிவந்தன. அதன் பின் பசியின் கதறல் ஏமாற்றத்தின் கத்தலாகி மாறிற்று. தொடர்ந்து ஏமாற்றத்தின் கத்தல் கோபத்தின் கத்தலாக வெடுத்துக்கொண்டு கிளம்பிற்று. முதிர்ந்த காகங்களின் கத்தல்களில் வெளிப்பட்ட கோபத்தை குஞ்சுகள் எதிரொலித்தன. என் மனதில் உள்ளூர ஒரு பயம் ஏற்பட்டது.

திடீரென்று மண்ணைக் கூர்ந்து கவனித்தேன். என்ன இது ஒரு மண் அரிக்கட இல்லை. மண்ணைக் கூர்ந்து கவனித்தபடியே வேகமாக நடக்கத் தொடங்கினேன். அலையாயும் காகங்களைத் தாண்டிக்கொண்டே ஓடினேன். அவை முன்னும் பின்னும் பறந்து துள்ளுகின்றன. ஒரு நதியின் சுழற்சியில் மாட்டிக்கொண்டதுபோல் சுற்றிச் சுற்றி வருகின்றன. என்று ஒன்றுகூட என் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஒன்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது. இன்று அந்தப் பாதையில் லாரிகள் ஓடவில்லை.

நான் சவேரியார் கோவில் ஜங்ஷனுக்கு வரும்போது எனக்கு நிச்சத் திணறிற்று. நேர்மேல் இருந்து ஒரு மாத்திரை எடுத்து நாக்கின் அடியில் வைத்துக் கொண்டேன். காகங்கள் முற்றாக மறைந்துவிட்டன. பசியுடன் வந்தவை பசியுடன் ஏமாற்றமும் கோபமும் தூக்கமும் சேர அவை திரும்பிச் சென்றுகொண்டிருக்கின்றன. சுவரி ஓரங்களையும் வேட்டுக் கூரையையும் அப்போதும் கோயாளிகளும், அங்கவீனர்களும் கத்திக்கொண்டிருந்தன. அவற்றின் கத்தல் முகப் பாதாபமாக இருந்தது.

ஜங்ஷனில் விசாரித்தபோதுதான் எனக்கு விஷயம் தெரிந்தது. இனி இந்தப் பாதைகளில் லாரிகள் ஓடாது. நள்ளிரவிலிருந்து ஒருவழிப் பாதை அமுலாகிவிட்டது.

4

அபிசாயம்தான் மறுநாள் காலை அந்த நீண்ட ஆகம்பாதையில் ஒரு காகம் கூட இறங்கவில்லை. அவற்றின் ஒரு சிலவேனும் அன்று வரக்கூடும் என்றுதான் நான் எதிர்பார்த்திருந்தேன்.

காலங்காலமாக வளர்ந்து அந்த படுக்கத்தை ஒரே நாளில் அவற்றால் எப்படி அறுத்துக் கொண்டு விட முடியும்? என்னால் நம்பவே முடியவில்லை. இது மனிதன் மேல் அவற்றுக்கு நம்பிக்கை பாக்கி இன்னும் எஞ்சியிருப்பதையே காட்டுகிறது. அப்படியென்றால் மனித இதயத்தின் இருக்கங்கள், தன்னையே உலகமாகக் காணும் அவர்களின் பொய்மைகள் காகங்களைச் சென்று எட்டியிட்டன என்றுதானே பொருள்? அவை எகுத்த முடிவு எனக்கழுத்த அவமானம் போல் எனக்குத் தோன்றத் தொடங்கிற்று. மனிதப் பதர்களில் அற்பமான பதராக என்னைக் கருதி, முகம் திருப்பி, என்னைக் கடந்து தெருக்கட்டுப் பறந்தது போல் தோன்றிற்று. அப்போதும் காற்றின் வழியாக என் செய்திகளை அவற்றிற்கு நான் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருந்தேன். நான் வெறும் மனிதன் மட்டுமல்ல; சகமனிதனும் கூட என்ற செய்தியை மட்டுமாவது சென்றடையச் செய்ய முடிந்திருந்தால் எவ்வளவோ சந்தோஷப் பட்டிருப்பேன். இதனால் என் மொழி என்னிடம் இருந்தது தவிர அவற்றின் மொழி என்னிடம் இல்லை, அதுமட்டுமல்ல; வீசியடித்த காற்றில் அவை கத்தித் துப்பிய 'உங்கள் உறவு எங்களுக்கு போதும்' என்ற செய்தி வந்து கொண்டேயிருந்தது. ஒரு காகத்தையேனும் பார்க்க நேர்ந்தால் மிகுந்த ஆசுவாசமடைவேன் என்று எனக்குத் தோன்றிற்று. செய்தி அதியாத ஒன்றேனும் இருக்கக்கூடும் அல்லவா? அந்த ஒன்றேனும் எதிர்பார்த்து வரக்கூடும். மனிதன்மீது இப்போதும் நம்பிக்கையை தக்க வைத்துக் கொண்டிருக்கும் ஒரு காகமேனும் இருக்கக் கூடும் அல்லவா? நான் மக மெதுவாக நடந்து போய்க் கொண்டிருந்தேன்.

கல்வாரி கோவிலின் சுவரில் ஒரு காகம் உட்கார்ந்து கொண்டிருந்தது. அந்த காகத்தை எனக்கு நன்றாகத் தெரியும். ஊனமுற்ற காகம் அது. அதன் வலதுகால் பூமியில் படியாமல் சற்று மேலே தூக்கி கொண்டிருக்கும். மக எளிய இரணச்சிகிச்சையில் அதை சரி செய்துவிட முடியும். ஆனால் அதற்கான விவேகம் மனிதனுக்கு இன்னும் கூடவில்லை. தன்னைச் சிகிச்சை செய்து முடித்துக் கொண்ட

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

காலத்திலிதான் அவனுக்கு இதெல்லாம் தட்டுப் படும். அந்தக் காலம் என் முகத்தைப் பார்க்க வில்லை; என் முகத்தை வருக்கட்டாயமாகத் தவிர்க்கிறது அது. அதன் உடல் இளைத்துப் போனதுபோல் தோன்றிற்று. அதன் அலகு வெளிற் இருந்தது. உடம்புக்குள் தன் சுழுத்தை இழுத்துக் கொண்டு தன்னையேக் குறுக்கிக் கொண்டுவிட்டது அது.

'அர்சிமணிக்னை இந்தப் பாதையில் மீண்டும் சிந்தனைக்க என்னால் முடியும்' என்று நான் சொன்னேன். என் வார்த்தகள் தன் காதில் விழுந்த பாவனையே அதற்கு இல்லை. அலகை லேசாக மேலே தூக்கி, சூன்யத்தைப் பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தது அது.

'உங்களுக்காக நேற்றுப் பேசினேன்' என்றேன்.

'உங்களுக்காக' என்று அது திருப்பிச் சொன்னதுபோல் தோன்றிற்று.

'இல்லை, இல்லை' என்று கத்தத் தொட ங்கினேன்.

அதன் சூன்ய வெறிப்பில் அப்போதும் எந்தச் லனமும் இல்லை. மிகுந்த மனசோ ர்வுடன் நகரத் தொடங்கினேன்.

5

அன்றைய கூட்டத்தில் நான் கலந்து கொள்ளக் கூடாது என்று என் வைத்தியரும், மனநோய் மருத்துவரும் உறுதியாகச் சொல்லி யிருந்தார்கள். 'கலந்து கொள்ளப் போகிறேன்' என்று நான் சொன்னதும் என் மனைவி அழத் தொடங்கினாள். 'அங்கு நான் என்ன சொல்லப் போகிறேன்' என்பது எனக்குச் சுத்தமாய்த் தெரிய வேண்டும் என்றேன். நான் கதிருவதில் பிரயோசனமில்லை என்ற ஆஸ்ட் தியாகியின் அபிப்பிராயத்தை என் மனைவி என்னிடம் சொன்னபோது பதிலாக என்னிடம் வெளிப்பட்ட வாக்கியம் அது. அதன் பின், 'அவர் [redacted] [redacted] [redacted] என்னை அழைத்துக் கொண்டு போகப் பயப்படுகிறார். நீ வா' என்று நான் என் மனைவியிடம் சொன்னேன்.

அன்று நான் என் வழக்கைக்காகக் சாத்து கொண்டிருக்கவில்லை. வருத்த எடுப்பிலேயே கத்தத் தொடங்கினேன். என் முன் உருவாக்கப் பட்டிருந்த ஜோடனைகளின் பொய்மை இல்லை கலை கிழித்தெறிய வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று. அப்போதும் கலைக்டர் புன்னகை செய்து கொண்டிருந்தார். மன்றனை நெருக்கும் சகல அதிகாரங்களையும் இழிவுகளையும் சுட்டும் குறியீடுபோல் இருந்தது அது.

'நீ யாருடைய பிரதிநிதி?' என்று மன் பெஞ்சியலிருந்து என் நெஞ்சை விரோதி கேட்டார்.

என்னை நெருமையில் அடிக்கிறார் அவர்! நோயுற்றுச் சிதைந்து போன ஒரு அவலத்திற்கு என்ன பன்மை வேண்டிக் கிடக்கிறது!

நான், 'காகங்களின் பிரதிநிதி' என்றேன். 'உங்கள் ஜாலங்களைக் கிழித்து, உங்கள் சொர்ப்பங்களை காகங்களுக்குக் காட்ட வந்திருக்கிறேன்' என்றேன்.

எல்லோரும் யோசனைச் சிரித்தார்கள். 'நீங்கள் பேசுங்கள்' என்றார் கலைக்டர். நான் பேசத் தொடங்கினேன்.

'காகங்களின் இருப்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் முடிவுகள் எடுக்க உங்களுக்கு அதிகாரம் தந்த சக்தி எது? என்று நான் கலைக்டரைப் பார்த்து கேட்டேன்.

கலைக்டரின் முகத்தில் புன்னகை மறையத் தொடங்கிற்று.

'மின் வினைகளை யோசிக்கத் தெரியா தவர்களுக்கு கையெழுத்திட அதிகாரம் இல்லை. இப்போது வணிகர்கள் அல்ல; காகங்கள் நான் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கூடம் ஆலைகளை வணிகர்கள் விலையில் ஏற்றிவிடு வார்கள், காகங்களுக்கோ உணவில்லை. மந்த காலத்திற்கு அவை கற்றுள்ள பங்கை நினைக்கும்போது மனம் விம்முகிறது. அவற்றின் உன்னதங்கள்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

காற்றில் கரைந்து கிடக்கின்றன. உங்களுடைய செத்த வரலாறு செத்த நாகரிகம் எல்லாம் உங்களைப் பற்றிக் தான் பேசிக் கொண்டிருக்கின்றன. இருகால் பிராணிகள் மட்டுமே உருவாக்கிய எந்த உன்னதமும் இந்த உலகத்தில் இல்லை. இருகால் பிராணிகள் உருவாக்கித் தந்திருப்பவை தீமை, கட்டுக்கடங்காத அதிகாரம். ஆக்கமும் அழிவும் தங்கள் கைகளில்தான் சகல நோயுற்ற முடிவுகளும் உருவாகி வருகின்றன. புகையும், புழுதியும், செடிகளும் கொடிகளும், புழுவும், பூச்சிகளும், காற்றும் ஒலியும், பறவைகளும், மிருகங்களும், இந்த நாகரிகத்தை உருவாக்க மனிதனுக்கு நிகரான பங்கை ஆற்றியுள்ளன. தனக்கான உலகத்தை உருவாக்கும் திமிரில் உலகத்தை உருவாக்கப் பங்காற்றியுள்ள அனைத்துச் சக்திகளையும் எவ்ரக்கமின்றி மனிதன் அழித்துக் கொண்டுவருகிறான். இந்த நன்றிகெட்டத் தனத்திற்கு தண்டனை வழங்க இந்த உலகத்தில் நீதிமன்றம் எதுவும் இல்லை.

'காகங்கள் உங்களிடமிருந்து கற்றுக்கொள்ள எந்த நாகரிகமும் இல்லை. பறவைகளில் அவை அதிக தூங்கடம் அடைந்தன என்றால் பறவைகளில் அவைதாம் உங்களுடன் அதிகம் உறவாட விரும்பின. ஆயிரக்கணக்கான கைதிகுடிநீர்கள் ஒரு பாதையில் கடந்து படியாலி" தூக்கிக் கதறினால் என்ன செய்வீர்கள்? அழுகையின் குரலைப் புரிந்து கொள்ள முடியாத அதிகாரம் ஒருபோதும் நன்மையை விளைவித்தது இல்லை. இன்று ஒரு நாயைக் கூடக் காகம்கூட உங்களை நம்பத் தயாராக இல்லை. இதனால் நீங்கள் காகங்களை அழித்து விடமுடியும் என்பதல்ல. ஒருக்காலும் உங்களால் அவற்றை அழிக்க முடியாது. தனக்காக மட்டுமே இந்த உலகம் படைக்கப்பட்டிருக்கிறது என்ற அகங்காரம் அதன்று அவற்றுக்கு இல்லை. மேலும் அவற்றின் அலகுகள் நுட்பமானவை. சிறகுகள் மென்மையானவை. பார்வை கூர்மையானது. இவற்றின் வழுக்களால் அவை வாழ்ந்து கொண்டிருக்கும். மனிதனை நம்பும் மடமையை அவை துறக்க வேண்டும். அவை பெரும் சக்தியாகத் திரண்டு ஒன்றாகப் பறக்கத் தொடங்கும்போது வானம் உங்கள் கண் கருகிக்கூடத் தெரியாமல் போகக்கூடும். அவற்றின் ஆற்றலை அன்று உணர்ந்து கொள்வீர்கள். அதனால் அன்று உங்களைத் திருத்திக் கொள்ள உங்களுக்கு அவகாசம் இருக்காது.'

எனக்குக் கண்கள் இருண்டு கொண்டு வந்தன.

'அவரைத் தாங்கிக் கொள்ளுங்கள்' என்று கலெக்டர் கத்துவது என் காதில் விழுந்தது.

ஊராந்தாவில் உட்கார்ந்துக் கொண்டிருந்த என் மனைவி ஓடோடி வந்து என்னைத் தாங்கிக் கொண்டாள்.

அப்போதும் உள் விழிப்பு எனக்கு நன்றாகவே இருந்தது. பொய் முகங்களைப் பார்க்கக் கூடி நான் கண்களை மூடிக் கொண்டேன்.

— x —

சுந்தர ராமசாமியின்
சிறுகதைகள் எண்ணம் நாலிலிருந்து

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

புறத்திலிருந்து

[கம்யூனிஸ்ட் வட்டத்திற்கு வெளியில் இருந்து பெறப்படும் படைப்புகள்]

சிலைகள் பற்றி

சிலைகளைப் பற்றி நாம் பேச வேண்டிய
நேரம் வந்து விட்டது.
தலை, உடல் மீது
பறவைகளின் எச்சம் வழிந்த கோடுகளில்
கடலின் உப்புக் காற்றைச்
சுவாசிக்கத் தெரியாதவை
பற்றியதல்ல நமது அக்கறை
இப்போது.
பாசிக் களிம்பேற்
தலை முறைகளைக் கடந்து நிற்கும் விளக்குகள்
இன்னும்
திரிந்தும் பெருமாய்
வயோதிகர் விட்டுச் சென்ற
உணவருந்தும் பாத்திரங்கள்
எல்லாம் ஒன்றாய்க் கரைந்து உருகி
நிமிர்ந்த சிலை பற்றி

அவரொட்டிகள்
தலைத் தொப்பிகள்
டீஸல் லாரிகள்
சக்தி வாய்ந்த அலை வீச்சில் இயங்கும்
தொடர்பு சாதனக் கருவிகள்
எல்லாம் சூழ்ந்து நின்றன
சிலைமுகத் திறப்பிற்கென

சிலை ஒரு உலோகம் என்றார் பெரியவர்
இன் றொருவரும் சிலையாக விரும்பமாட்டார்கள்
என ஆமோதித்தார் துணைவர்
கை மறைவில்
புகைப்புகையில் சூழ்ந்திருந்த
சோற்றுப் பட்டாளத்தின் அணிவகுப்புக்கோ
உயிருடன் அலைந்து சிலையாக ஒருவர் வேண்டும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அலை
வேர் விடக் கூடாது
கிளைக்கக் கூடாது
பேசக் கூடாது.

எனினும்
வெண்கலச் சிலை வேற்று அலை வரிசையில்
ஒலிபரப்பிக் கொண்டிருந்தது
காவலி எல்லைகளைக் கடந்து.

— பிரம்மராஜன்

வழி உணரும் மனிதர்கள் என்ற நூலில் இருந்து.

பிரம்மராஜன் வழி உணரும் மனிதர்கள், அரிந்த நிரந்தரம் முதலிய கவிதை தொகுதிகளின் ஆசிரியர்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கட்டுரை

தொங்கி நிற்கும் தமிழ்ப் பத்திரிகைகள்

– ஞாநி

தமிழ்ப் பத்திரிகைச் சூழல் இன்று எப்படி உள்ளது என்பதைப் பல வழிகளில் மதிப்பிடலாம். வாசகருடைய சூழல், பத்திரிகையாளர்கள்/எழுத்தாளர்களின் சூழல், பத்திரிகையாளர்களின் பத்திரிகை அதிபர்களின் சூழல் என்று மூன்று பார்வைகளிலிருந்தும் இதைக் கணிக்கலாம். அண்மையில் பாரதிராஜா தலைமையிலான நெய்வேலிப் பேரணி பற்றிச் செய்திகள் வெளிவரும் போது, பேரணி பற்றிச் செய்திகள் வெளிவரும் போது, பேரணிக்கு கமல்ஹாசனும் சிம்ரனும் சென்னையிலிருந்து ஒரே காரில் வந்த செய்தியை, தினமணி தனிப் பெட்டிச் செய்தியாக வெளியிட்டது. அவர்கள் இருவரும் ஒரே காரில் வந்தது எந்த விதத்தில் செய்தியாகிறது? அவர்கள் இடையிலான காதல் உறவு பற்றி இதற்கு முன்பு வெளிவந்திருக்கும் செய்திகளின் பின்னணியிலேயே, ஒரே கார் பயணம் புது செய்தியாகிறது. பழைய செய்திகளோ உறுதிப்படுத்தப் படாத கிசுகிசுக்-கள். அதாவது முதலில் வெளியான ஒரு உண்மையான செய்தியின் அடிப்படையில் புதுச் செய்தியாகி உற்பத்தியாவதற்கு பதில், பழைய கிசுகிசுக்களே புதிய செய்திகளுக்கு அடிப்படையாக்கப்படுகின்றன.

இந்தச் செய்தி தினமணியில் வெளிவந்திருக்கிறது என்பதே இன்றைய சூழலை மதிப்பிடுவதற்கு உதவும் தகவல். சில ஆண்டுகள் முன்பு வரை இதை தினமணியில் காண இயலாது. தினத்தந்தியும், தினமலரும் இத்தகைய செய்திகளை நீண்ட நெடுங்காலமாக வெளியிட்டு வருகின்றன (அவற்றில் வேறு முக்கியமான செய்திகளும் வருகின்றன என்பது இதனால் மறுக்கப்படவில்லை) இப்போது தினமணியும் என்கிறபோது, இந்த மாற்றங்களுக்கு காரணம் என்ன? தினமணியின் ஆசிரியர் மாறவில்லை. அதே ஆசிரியர் தான். உரிமையாளர்/அதிபர் மாறவில்லை. வாசகர்கள்? அவர்கள் மாறவேயில்லை. இல்லை வாசகர்கள் மாற்றப்படுகிறார்கள். அதைச் செய்யும் பணியாகப் பத்திரிகையாளர்கள் மாற்றப்படுகிறார்கள்.

பத்திரிகையின் தொலைநோக்கு, விற்பனை தொடர்பான அதிபரின் கருத்துக்களுக்கு இணையாத வராத ஆட்கள் மாற்றப்படுவது

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

படிய அணுகுமுறை. ஆள் மாற்றாமல், ஆணை மாற்றுவது புதிய சூடுதல். எப்படி மாற்றினாலும் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்போரையே இன்று வேலைக்குச் சேர்த்துக்கொள்ள நிர்வாகங்கள் விரும்புகின்றன. அப்படித் தங்களை மாற்றிக்கொள்ளத் தயாராகப் பலரும் முன்வந்தாலும், குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அதே மன நிலையுடன் ஆனால் துருதுரு இளமைத் துடிப்புடன் முன்வரும் இன்னொரு அணியை சேர்த்துக் கொண்டு படிய அணியைத் தூக்கி எறிவதும் இன்றைய நிர்வாகங்களின் அணுகுமுறையாக உள்ளது. இது உண்மை உலகில் செல்ஸ் அண்ட் மார்க்கெட்டிங்கில் பல காலமாகப் பின்பற்றப்படும் உத்தி. 20 முதல் 25 வயது வரை செல்ஸ் பிரதிநிதியாக ஒருவர் உழைத்துக் களைக்கும் வேளையில் அவரைத் துரத்திவிட்டு புதிய 20வயதுக்காரர்களை சேர்த்துக் கொள்கிறார்கள்.

சுமார் ஒராண்டுக்கு முன்னால் வாரத்துக்கு இரண்டு பேர் தினம் அட்சணை சேர்த்துக்கொண்டே போன குழுதம் இப்போது தூக்கி எறியத் தொடங்கியிருக்கிறது. புதிய சிந்தைப் பொருளாதார அடிமுறைகளின் படி பத்திரிகை உலகிலும் எந்த நேரத்திலும் யாரையும் நியமிக்கலாம்; எவரையும் தூக்கி எறியலாம் என்ற hire & fire அணுகுமுறை உருவாகிவிட்டது. வாரத்தில் இரண்டு பேராவது என்னிடம் வேலை தேடுவதில் உதவும்படி கேட்கிறார்கள். இதில் சிலர் 40ஐக் கடந்தவர்கள். பெரும்பாலோர் முப்பதுகளில் இருப்பவர்கள். இந்தச் சூழலில், முன் எப்போதையும் விட, முழுநேரப் பத்திரிகையாளர்கள் பலரும் தாங்கள் வேலை பார்க்கும் இடங்களில் வேலையைத் தக்கவைத்துக் கொள்வதையே தினசரிப் பிரச்சனையாகக் கருதி அதற்கேற்ற புத்திசாலித்தனங்களைப் பின்பற்றும் சிறுமை-கருசிந்தி உடைபடும் நிலை இருக்கிறது.

முழு நேர ஊழியர்களாக இல்லாமல் வெளியிலிருந்து அவ்வப்போது பிரசுர ஏற்பாடு கிட்டும் எழுத்தாளர்களில் பல வகையினர் உண்டு. இதில் புதிதாக சேர்ந்துள்ள ஒரு வகையினர் தொடக்கத்தில்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இருந்தே அணிகள் இதழ்களில் எழுதுவதை விரும்பாமலோ, எதிர்நோக்காமலோ இருந்துவிட்டவர்கள். எதிலே எழுதினாலும் நாம் என்ன எழுதுகிறோம் என்பதுதான் முக்கியம் என்ற சிரியான கருத்தாக்கத்துக்குத் தாமதமாகவும் பதிலாகவும் அந்த சேர்ந்த இவர்களில் சிலர் (எல்லாரும் அல்ல) அணிக இதழ்களில் கிடைக்கும் விளம்பரம், அணிணப்புகைப்படம், பணம், முதலியவற்றின் கவர்ச்சியால், அணிக இதழ்களை அமர்த்திக்கும் உரிமையையும் வேர்த்துக் கைவருபவர்களாக இருக்கிறார்கள். அணிக இதழ்களின் வாடிக்கையான எழுத்தாளர்களான தொலைக்காட்சியும் சினிமாவையும் நாடிச் அனிந்துவிட்டார்கள்.

வாசகருக்கான சூழல் எப்படி அமைகிறது? இன்று வெகுஜன அணிகள் பத்திரிகைகளுக்கு ஏஸ்வாசமான வாசகர்கள் குறைவு. Brand loyalty என்கிற வார்த்தைக்கு ஆங்கிலப்படைப்பு பத்திரிகைத் துறையிலும் நீண்ட காலம் இருந்து வந்தது. இது இன்று மற்ற அர்த்தங்களைப் போலவே இங்கும் மாறிவருகின்றது. தான் தொடர்ந்து படித்து வரும் பத்திரிகையில் சின்னசின்ன மாறுபாடுகள் வரவேண்டும், வரவில்லை என்றால் ஏன் வரவில்லை என்று உரிமையுடன் கேட்கும் என்ற வாசகப்பார்வை மாறிவிட்டது. மாறாக, தனக்கு விருப்பமானவை ஒரு இதழில் வருவது குறைந்துவிட்டால், அதை உதறிவிட்டு வேறு இதழைத் தேடுவது வாசக அணுகுமுறையாகிவிட்டது. இதுவும் சந்தைப் பொருளாதாரம் சார்ந்த மோகலை மாற்றம்தான். இதற்கு ஈடு கொடுக்கவே பத்திரிகைகள் முன்பை விட அதிகமாக பரிசுகளையும், தகுதி இணைப்புகளையும், எல்லாவிதமான - (சென்சுக்மான் முரண்பட்ட) - ரசனைகளுக்குமான வரவுயாங்களையும் தர முற்படுகின்றன. காலச்சுவடு பதிப்பக நூல்கள் வெகுசனங்களுக்கான போட்டிக்கு விற்கின்றன என்ற தகவல், அணிக இதழ் நடத்துவோரை, இந்த விட்டாரத்தும் கணிசமான வாசகர்கள் உண்டானில் அவர்களிடம் நமது இதழை எப்படி அறிமுகப்படுத்தி அந்த விட்டார எழுத்தாளர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வோம் என்று தீட்டமிடச் செய்கிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

குஜராத் படுகொலைகளானாலும், காவிரிப் பிரச்சினையானாலும், பாபா சினிமா விவகாரமானாலும், தமிழ்ப் பத்திரிகைகளில் தொண்ணூறுகள் வரை காணப்பட்ட அதிகரித்த அலசல் பார்வை கூட இப்போது குறைந்துவிட்டது. எல்லாமே அரட்டை, காலைப், கிசுகிசு வடிவத்துக்குக் கீழிறக்கப்பட்டுவிட்டன. தமிழ் வெகுஜன இதழ்களில் இன்று ஆழமான அரசியல், சமூக அலசல் கட்டுரைகள் என்று கருதப்படுபவற்றின் தரம், ஆங்கில இதழ்களின் சமமான கட்டுரைகளின் தரத்தை கூட எட்டுவதில்லை.

தமிழ் தினசரிகளிலும் சரி, பருவ இதழ்களிலும் சரி, இன்று ஒரு தேக்கமான நிலை நிலவுகிறது. தினந்தந்தி தனி கவரும் செய்திகள், சினிமா செய்திகளுடன் சரிசமமாக, உலகச் செய்திகள் வரை எல்லாவற்றையும் கடந்த பத்தாண்டுகளாகவே வெளிவிட்டாலும் வருவாய்கூடி, சமூக கலாச்சார விதாபனங்கள் சார்பான பார்வையில் மாற்றம் இல்லை. தினமலர், எந்த வகைச் செய்தியானாலும், அதைத் தமிழ் திரைப்படத்துக்கு நிகரான பொழுதுபோக்காக மாற்றும் அணுகுமுறையில் தன்னை வளர்த்து கொண்டு நிலைநிறுத்தி இன்று இந்துத்துவ சார்பு நிலை எடுத்துப் பத்தாண்டு - காலத்து மேலாகிறது. தினமணி ஆனாயமயூர்யமான விவாதங்க - காலத்தான கலனாகத் தன்னை அடையாளத்துக் கொண்டு உருவாக்கிய தர அளவுகோலில் சிமார் பத்தாண்டுகள் நிலையாக செயல்பட்ட பிறகு அதிலிருந்து சரியத் தொடங்கி சில ஆண்டுகளாகிவிட்டன. பருவ இதழ்களில் ஓரிடம் குமுதம் தன் எல்லா இதழ்களிலும் ஒரு குறிப்பிட்ட தர அளவுகோலை அடைந்த பின் தேக்க நிலையை எட்டி, அதிலேயே நின்றுகொண்டிருக்கிறது. குமுதம் குழுமம் தன் அச்சு, விநியோக செலவின் பலத்தை மட்டுமே நம்பி புராணமான இதழ்கள் வெளியிட்டு கூட முடியும் என்று நம்பி தன் கையை சுட்டுக் கொண்டும், தன் அடிப்படை குணங்கள் மாறாத தேக்கத்தில் இருக்கிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

எனக்கு இதழ் சூழலுக்கேற்பவே காலத்துக்குக் காலம் சில புதிய வார்ப்புகள் உருவாக வேண்டும். கடைசியாக 1988ல் இன்பார் விகடனும், அருகிய சில வருடங்களில் நக்கீரனும் ஒரு புதிய பாணி இதழியலை வெற்றிகரமாக நிறுவியபோது (அதன் நிறை குறைகள் தனியே ஆராதிக்கப்பட வேண்டியவை), வேறு புதிய பாணி எதுவும் 15 ஆண்டுகளாக வரவில்லை, ஒரே மதிவிலக்கு சிறுவர் இதழ் துறையில் சிட்டு மட்டுமே. (தமிழில் வாசிக்கும் படிக்கும் ஆங்கிலக் கல்வி அதிகம் நிலவும் தமிழகச் சிறுவர் தலைமுறையில் குறைந்து வருகிறது என்ற சூழலானாலேயே இது முக்கியமானதாகிறது) இன்று இன்னொரு புதிய பாணியை எதிர் நோக்கி ஒரு வெற்றிடம் காத்திருக்கிறது.

எதையும் கேள்வி கேட்காத வாசகர், எல்லாவற்றையும் பொழுதுபோக்காக மட்டுமே பார்க்கிப் படிக்கப்படுத்தப்பட்ட வாசகர்கள். எதையும் எதிர்க்காமல் நிர்வாகத்தின் சிந்தனையுடன் ஒம்புலியையில் நீர் ஊறி கலக்கும் இயல்புள்ள பத்திரிகையாளர்கள், குடிபோன இந்திய அரசியலின் தன்மைக்கேற்ப எப்படி வேண்டுமானாலும் அரசியல் நடத்தலாம் என்பது போல, எப்படி வேண்டுமானாலும் பத்திரிகை நடத்தி பணம் வெற்றி வர முடியுமா என்று தமோனும் நிர்வாகங்கள் இவையே இன்று தமிழ் வெகுஜனப் பத்திரிகைச் சூழலின் அடையாளங்களாக இருக்கின்றன. விதிவிலக்கான சில நிகழ்வுகள் தெரியப்பட்டால், அவற்றில் இந்தத் தகுதியை உடைப்பதற்கான பொறிகள் தெரிகிறதா என்று மனம் ஏங்குகிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE